# தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சிபுரம்

**முன்னிலை. திருமதி.S.சுஜாதா, எம்.ஏ., எம்.எல்.,**
**தலைமை தாங்கும் அலுவலர்,**
**காஞ்சிபுரம்.**

2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14ம் நாள் வெள்ளிக்கிழமை

## I.D. No.148/2021

## CNR No.TNKP18-000349-2021

V.சதீஷ்குமார், (வ-39)
த/பெ. வெங்கடசுப்ரமணியன்,
எண்.1059, யமுனா நகர்,
முதல் தெரு, நசரத்பேட்டை,
திருவள்ளூர் மாவட்டம் - 600 123. ...... மனுதாரர்/தொழிலாளி

/எதிராக/

நிர்வாகம்,
மியூங் சங் இந்தியா பிரைவேட் லிமிடெட்,
எண்.276, 277, 278 ஸ்ரீ கஜலட்சுமி நகர்,
இருங்காட்டு கோட்டை கிராமம்,
காஞ்சிபுரம் மாவட்டம் 602 117. ...... எதிர்மனுதாரர்/நிர்வாகம்

இந்த தொழிற்தகராறு வழக்கு கடந்த 07.06.2024 அன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு வந்தபோது மனுதாரர் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திரு.எஸ்.குமாரசாமி, திரு.கு.பாரதி, திரு.க.சுரேஷ், எம்.கே.நிவேதா மற்றும் திரு.ஜெ.மோகன்ராஜ் ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.எம்.இளங்கோவன், திரு.எம்.தண்டாயுதபாணி மற்றும் திரு.ஆர்.கார்த்திக் ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்ட நிலையில் மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசீலித்து இன்று நீதிமன்றம் வழங்கும்,

**தீர்வம்**

1 எதிர்மனுதாரர் மனுதாரருக்கு அளித்த வேலை நீக்கம் அநியாயமானதென்றும் அவருக்கு பணி தொடர்ச்சியுடன், பின் சம்பளத்துடன் மற்றும் இதர பயன்களுடன் மீண்டும் வேலை வழங்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிட வேண்டுமென்று தொழிற்தகராறு சட்டப்பிரிவு 2A(2)ன் கீழ் இந்த தொழிற்தகராறு வழக்கை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

**2.) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள தொழிற்தகராறு சட்டப்பிரிவு 2A(2)ன் கீழான கோரிக்கை மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 03.10.2007 முதல் டூல் ரூம் CNC ஆப்ரேட்டராக நல்ல முறையில் பணி செய்து வந்தார். மனுதாரர் கடைசியாக வாங்கிய மாதச்சம்பளம் ரூ.30,000/-. எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் 200க்கும் மேற்படிட்ட தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்கள். 04.03.2015 தேதியில் மனுதாரரும் மற்றவர்களும் செங்கை அண்ணா மாவட்ட ஜனநாயக தொழிலாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்தார்கள். இது குறித்து கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. 21.05.2015 தேதியிட்ட கடிதத்தில் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்திலிருந்து விலக வேண்டுமென்று நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டது. இது குறித்து 22.05.2015 தேதியில் சமரச அதிகாரி முன்பு தொழிலாளர்கள் சங்கத்தின் மூலம் புகாராக செய்யப்பட்டது. மீண்டும் 26.05.2015 அன்று நிர்வாகம் அளித்த அறிவிப்பில் தொழிற்சங்கத்தைவிட்டு வெளியேற வேண்டுமென்று கூறப்பட்டிருந்தது. சங்கத்தைவிட்டு விலகுமாறு நிர்வாகம் கொடுத்த

மாதிரி கடிதம் கொடுத்து அதில் கையெழுத்திட மறுத்த தொழிலாளர்களை பணி நீக்கம் செய்துவிட்டது. இந்நிலையில் மீண்டும் தொழிலாளர்கள் தங்களுடைய தொழில் பாதுகாப்புக்காக 01.02.2018 தேதியில் தொழிற்சங்கத்தை மீண்டும் ஆரம்பித்து நிர்வாகத்திற்கு கடிதம் மூலம் தெரிவித்தனர். இந்த சங்கத்தில் மனுதாரர் ஒரு முக்கிய நிர்வாகியாக இருந்தார். மீண்டும் சங்கம் ஆரம்பித்ததால் ஆத்திரமுற்ற நிர்வாகம் சங்கத்தில் முன்னணியாக செயல்பட்ட மனுதாரரை பழி வாங்க நிர்வாகம் 05.03.2018 தேதியில் தற்காலிக பணி நீக்க ஆணையுடன் கூடிய குற்றப்பத்திரிக்கையை மனுதாரருக்கு அளித்தது. அதில் 14.02.2018 அன்று மனுதாரர் வேலையின் போது CNC Cutter Tool யை உபயோகப்படுத்தும் போது அதை கவனகுறைவாக உடைத்ததாகவும், அது யாருக்கும் தெரிய கூடாது என்பதற்காக அதனை ஒட்டி திரும்பவும் வைத்ததாகவும், அனைறைய லாக் புக்கில் அது குறித்து பதிவு செய்யவில்லை என்றும், பணி நேரத்தில் உறக்கத்தில் இருந்ததாகவும், உற்பத்தி தாமதப்பட்டதாகவும், இதனால் வாடிக்கையாளர்கள் நிறுவனத்தில் மேல் வைத்துள்ள நம்பிக்கை சீர்குலைக்கப்பட்டதாகவும் நிலையாணைகள் விதி எண் 25(4),25(11),25(14),25(33),25(63) ஆகியவற்றிற்கு புறம்பானது என தெரிவித்து 05.03.2018 முதல் பணியிடை நீக்கம் செய்தது. மனுதாரர் 09.03.2018 தேதியில் விளக்க கடிதம் மூலம் உண்மையில் நடந்த விவரங்களை நிர்வாகத்திற்கு தெரிவித்தார். 14.02.2018 இரவு ஷிப்ட் என்பதால் Breakage report sheet இல்லாததால் மறுநாள் 15.02.2018 அன்று மேலாளர் திரு.வி.ரங்கசாமியிடம் வாய்மொழியாக கட்டர் உடைந்தது

குறித்து தெரிவித்து பணி செய்துவந்ததாகவும் இந்நிலையில் 21.02.2018 அன்று பணிக்கு வந்த போது மேலாளர் மனுதாரரிடம் 14.02.2018 ல் கட்டர் உடைந்ததை ஒர்க் ஆர்டர் லாக்புக்கில் பதிவு செய்யுமாறு சொன்னதால் பதிவு செய்ததாகவும், தொழிற்சங்க நிர்வாகிகள் அறிமுக கூட்டத்திற்கு அழைக்குமாறு நிர்வகத்திற்கு தெரிவித்ததாலும், தொழிலாளர்கள் பொது கோரிக்கை குறித்து நிர்வாகத்திற்கு கடிதம் அளிக்கப்பட்டதாலும், மனுதாரர் பொருளாளராக செயல்பட்டதாலும், நிர்வாகம் ஏற்கனவே சங்க முன்னணிகளை பழி வாங்கும் நோக்கத்தில் 14.02.2018 தேதியில் கட்டர் உடைந்ததை 21.02.2018 தேதியில் மனுதாரரிடம் லாக்புக்கில்பதிவு செய்ய சொன்ன நிர்வாக மேலாளர் ரங்கசாமி அவர்களே பின்னாளில் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியாக மாறி 05.03.2018 அன்று குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கியது. தூங்கியதாக சொல்லி மனுதாரரிடம் விளக்கம் கோராமாலும் பொது கோரிக்கை குறித்த கடிதத்தை அனுப்பிய பிறகு திட்டமிட்டு 05.03.2018 தேதியில் குற்றப்பத்திரிக்கை அளித்தது நியாயமில்லை என்று மனுதாரர் 09.03.2018 தேதியில் அளித்த விளக்கத்தை ஏற்றுக்கொள்ளாமல் நிர்வாகம் மனுதாரர் மீது உள்விசாரணை 07.05.2018 முதல் 23.08.2018 வரை நடத்தியது. விசாரணையின் போது மனுதாரர் சக தொழிலாளி யோகராஜ் அவர்களை உதவிக்கு அழைத்து வர அனுமதி கோரிய போது மறுக்கப்பட்டு விசாரணையில் மனுதாரரை அச்சப்படுத்தியும், பயத்தை உருவாக்கியும் விசாரணை அதிகாரி நிர்வாக பிரதிநிதிகளோடு கலந்து ஒருதலைபட்சமாக நடந்துக்கொண்டு மனுதாரரை விசாரணையிலிருந்து வெளியேற்றியதால் மனுதாரர் அன்றைய விசாரணை குறிப்பில் கையெழுத்திட

மறுத்துவிட்டார் என்றும், இது குறித்து மனுதாரர் 11.05.2018 அன்றே நிர்வாகத்திற்கு கடிதம் அனுப்பினார். ஆனால் நிர்வாகம் அதை பரிசீலிக்காமல் 16.05.2018 தேதிய கடிதம் மூலம் விசாரணை அதிகாரியின் முறைகேடான செயல் குறித்து அவரிடமே புகார் அளிக்குமாறு தெரிவித்தது. நிர்வாகத்தரப்பு சாட்சி திரு.ஆர்.காளிதாஜ் அவர்களை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு மறுக்கப்பட்டது. உள்ளீட்டு விசாரணை அதிகாரி நிர்வாகம் சார்பாகவே தன்னிச்சையாக முடிவெடுத்ததை குறிப்பிட்டு அதிகாரியை மாற்ற கோரி கடிதம் அனுப்பினார். அதை ஏற்றுக்கொள்ளாமல் இயற்கை நீதிக்கு எதிராக விசாரணை முடிக்கப்பட்டது. வேறு ஒரு நியாயமான உள்விசாரணை அதிகாரியின் முன்னிலையில் வீடியோ புட்டேஜ் நகலை கொடுத்து நிர்வாகத்தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டுமாய் கோரினார். மனுதாரருடைய கோரிக்கையை பரிசீலிக்காமல் 10.10.2018 அன்று விசாரணை முடிவறிக்கை வழங்கியது. இந்த முடிவறிக்கையை 10.10.2018 தேதிக்கு பதிலாக தவறுதலாக 27.12.2018 தேதியிட்டு மனுதாரருக்கு கடிதம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது. மனுதாரர் 03.01.2019 தேதியில் மீண்டும் பணி வழங்க கோரி கடிதம் கொடுத்தார். அதனை பரிசீலிக்காமல் 28.01.2019 தேதியில் 2வது காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதற்கு மனுதாரர் உரிய விளக்கத்தை கொடுத்தும் ஏற்காத நிர்வாகம் 23.07.2019 தேதியில் வேலை நீக்க கடிதத்தை மனுதாரருக்கு அனுப்பியது. அத்துடன் ரூ.2,19,443/-க்கான காசோலையும் அனுப்பப்பட்டிருந்தது. இந்த தொகையில் பணிக்கொடை தொகை மட்டும் நிர்வாகத்திற்கு திருப்பி அனுப்பி வேலை

வழங்க வேண்டுமென்று மனுதாரர் கடிதம் அனுப்பினார். அதன் பிறகும் வேலை வழங்காத காரணத்தினால் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு தொழிற்தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரையில் உண்மைக்கு மாறான தகவல் தெரிவிக்கப்பட்டது. சமரச அலுவலர் முன்பு நடத்தப்பட்ட விசாரணையில் முடிவு எட்டப்படாததினால் 02.03.2020 அன்று சமரச முறிவு அறிக்கை வழங்கப்பட்டது. எனவே மனுதாரருடைய வேலை நீக்கம் தொழிற்தகராறு சட்டம் 1947 25(G) பிரிவிற்கு புறம்பானது அநியாயமானதென்றும் அதனால் பின்சம்பளம், பணித்தொடர்ச்சி மற்றும் இதர பயன்களுடன் மீண்டும் வேலை வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவு செய்யப்பட வேண்டும் என்று தொ.த.சட்டம் 1947 பிரிவு 2(A)(2)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர் தரப்பில் மனுதாரர் தொ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு தொ.த.சா.ஆ.1 முதல் தொ.த.சா.ஆ.26 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டார்.

**4) இவ்வழக்கில் தீர்க்கக்கூடிய பிரச்சனை யாதெனில்,**

மனுதாரர் இந்த வழக்கில் எதிர்மனுதாரருக்கு எதிராக கோரும் பரிகாரங்கள் கிடைக்கக்கூடியதா?

**தீர்வு**

**5**) மனுதாரர் நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். தகுதிகாண் பருவத்தினராக நியமிக்கப்பட்ட உத்தரவு நகல் தொ.த.சா.ஆ.1. ஆகவும், மனுதாரருக்கு நிர்வாகம் வழங்கிய பணி நியமன ஆணை நகல் தொ.த.சா.ஆ.2. ஆகவும், தொழிற்சங்க அறிமுக கடித நகல் தொ.த.சா.ஆ.3. ஆகவும், மனுதாரர் சங்கத்தை விட்டு விலகவேண்டும் என்று நிர்வாகம் கொடுத்த அறிவிப்பு நகல் தொ.த.சா.ஆ.4. ஆகவும், தொழிற்சங்கம் சமரச அதிகாரி முன்பு அளித்த புகார் கடித நகல் தொ.த.சா.ஆ.5. ஆகவும், மனுதாரர் தொழிற்சங்கத்தில் இணைந்ததற்கான அறிமுக கடித நகல் தொ.த.சா.ஆ.6. ஆகவும், தொழிலாளர்களின் பொது கோரிக்கைகள் சம்பந்தமாக தொழிற்சங்கம் நிர்வாகத்திற்கு எழுதிய கடித நகல் தொ.த.சா.ஆ.7.ஆகவும், நிர்வாகம் மனுதாரருக்கு அளித்த தற்காலிக பணி நீக்க கடித நகல் தொ.த.சா.ஆ.8.ஆகவும், மனுதாரர் நிர்வாகத்திற்கு நேரிலும் தபாலிலும் அனுப்பிய விளக்க கடித நகல் மற்றும் நிர்வாகம் அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல் தொ.த.சா.ஆ.9. ஆகவும், மனுதாரர் மீது விசாரணை நடத்துவது குறித்து அனுப்பிய அறிவிப்பு நகல் தொ.த.சா.ஆ.10. ஆகவும், 07.02.2018 தேதி முதல் 23.08.2019 வரையில் நடந்த விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நகல்கள் தொ.த.சா.ஆ.11. ஆகவும், உள்ளீட்டு விசாரணை மற்றும் முடிவறிக்கை நியாயமற்றது என குறிப்பிட்டு நிர்வாகத்திற்கு மனுதாரர் அனுப்பிய பதில் கடித நகல் மற்றும் நிர்வாகம் அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக

ஒப்புகை அட்டை நகல் தொ.த.சா.ஆ.12. ஆகவும், விசாரணை முடிவறிக்கை நகல் தொ.த.சா.ஆ.13.ஆகவும், விசாரணை முடிவறிக்கை தேதியை தவறுதலாக தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பிய கடித நகல் தொ.த.சா.ஆ.14. ஆகவும், உள்ளீட்டு விசாரணை மற்றும் முடிவறிக்கை நியாயமற்றது என குறிப்பிட்டு நிர்வாகத்திற்கு மனுதாரர் அனுப்பிய பதில் கடித நகல் மற்றும் நிர்வாகம் அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல் தொ.த.சா.ஆ.15.ஆகவும், நிர்வாகத்தின் ஒழுக்க கட்டுப்பாட்டு அதிகாரியின் விவரமான ஆணை நகல் தொ.த.சா.ஆ.16. ஆகவும், நிர்வாகத்தின் ஒழுக்க கட்டுப்பாட்டு அதிகாரியின் விவரமான ஆணைக்கு மனுதாரர் அளித்த பதில் கடித நகல் மற்றும் நிர்வாகம் அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல் தொ.த.சா.ஆ.17.ஆகவும், நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய 2ம் காரணம் கோரும் அறிவிப்பு நகல் தொ.த.சா.ஆ.18.ஆகவும், 2ம் காரணம் கோரும் அறிவிப்பிற்கு மனுதாரர் அளித்த பதில் கடித நகல் மற்றும் நிர்வாகம் அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல் தொ.த.சா.ஆ.19. ஆகவும், நிர்வாகம் மனுதாரரை பணி நீக்கம் செய்து கொடுத்த உத்தரவு நகல் தொ.த.சா.ஆ.20.ஆகவும், மனுதாரர் பணிக்கொடை தொகையை நிர்வாகத்திற்கு வரைவோலை மூலம் திருப்பி அனுப்பி மீண்டும் வேலை வழங்கவேண்டும் என்று கோரிய கடித நகல் மற்றும் நிர்வாகம் அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல் தொ.த.சா.ஆ.21. ஆகவும், மனுதாரர் நிர்வாகத்திடம் மீண்டும் வேலை கேட்டு தொழிலாளர் துணை ஆணையர் முன்பு தாக்கல் செய்த 2A மனு நகல் தொ.த.சா.ஆ.22. ஆகவும், தொழிற்தாவா

மனுவிற்கு நிர்வாகம் அளித்த பதில் கடித நகல் தொ.த.சா.ஆ.23. ஆகவும், நிர்வாகத்தின் பதில் கடிதத்திற்கு மனுதாரர் அளித்த மறுப்பு கடித நகல் தொ.த.சா.ஆ.24. ஆகவும், சமரச முறிவறிக்கை நகல் தொ.த.சா.ஆ.25. ஆகவும், சம்பள விவர ரசீது தொ.த.சா.ஆ.26. ஆகவும் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. மனுதாரர் தொழிற்சங்கத்தில் ஈடுபாட்டுடன் பொருளாளராக இருந்த காரணத்தினால் அதனை விரும்பாத நிர்வாகம் மனுதாரர் மீது வேண்டுமென்றே குற்றம் சாட்டி குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டதாகவும், அதே போல் விசாரணை அதிகாரி 07.05.2018 முதல் 23.18.2018 வரை நடத்தி மனுதாரர் கேட்டுக்கொண்ட தேதிகளில் விசாரணை நடத்தாமல் MW3 திரு.காளிராஜ் அவர்களை விசாரிக்க வாய்ப்பு அளிக்காமல் ஒருதலைபட்சமாக செயல்பட்டு மிக காலதாமதமாக 10.10.2018 அன்று விசாரணை முடிவுறிக்கை வழங்கப்பட்டு உள்ளீட்டு விசாரணையில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்காமலும் மனுதாரர் தரப்பில் சாட்சியம் அளிப்பதற்கான வாய்ப்பை தராமலும் உள்துறை விசாரணை ஒருதலைபட்சமாக முடிக்கப்பட்டு வேலை நீக்கம் செய்வதற்கு முன்பு உள்ளீட்டு விசாரணை இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டதா? இல்லையா? என்ற எழுவினாவை எழுப்பாமல் உள்ளீட்டு விசாரணையில் மனுதாரர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்து குற்றச்சாட்டுகளோடு ஒப்பீடுகையில் வழங்கப்பட்ட தண்டனை அதீதமானது பொருளாதார மரண தண்டனைக்கு ஒப்பானது என்று குறிப்பிட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

7. எதிர்மனுதாரர் இந்த வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் தொழிற்சங்கத்தில் ஈடுபாட்டுடன் இருந்த காரணத்தினால் நிர்வாகம் தன்னை பழி வாங்கும் நோக்கத்தில் பொய்யான குற்றச்சாட்டுகள் கூறி குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டதாக கூறும் நிலையில் இது குறித்து நிர்வாகத்தரப்பில் எந்த ஆட்சேபனையும் செய்ய முன் வரவில்லை. மனுதாரர் மீது நடத்தப்பட்ட உள்விசாரணை முறையாகவும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்படவில்லை என்று மனுதாரர் தரப்பில் கூறப்படுவதை ஆட்சேபனை செய்து மறுக்கும் வகையில் நிர்வாகத்தரப்பில் இந்த வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என்பதால் வேண்டுமென்றே பழி வாங்கும் நோக்கத்தில் தொழிலாளர் விரோத போக்குடன் நிர்வாகம் செயல்பட்டு சட்டவிரோதமாக மனுதாரர் பணி நீக்கம் செய்யப்பட்டார் என்று மனுதாரர் தன்னுடைய மனுவில் தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் நிர்வாகத்தரப்பின் மீது மனுதாரர் கூறும் குற்றச்சாட்டுகளை ஆட்சேபிக்கும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் இந்த வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை.

8. மனுதாரர் தரப்பில் **1982-1-Page 33**

**Workmen of Williamson Magor & Co -Vs- Williamson & Company Limited and another** என்ற வழக்கில் Any Unjust Action is Victimization என்று மாண்பமை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளதாகவும்,

**1975 (II) LLJ page 379**

**Coper Engineering Limited -Vs- Shri P.P.Mundhe** என்ற வழக்கில் மாண்பமை உயர் நீதிமன்றம் அளித்த தீர்வு முடிவில் விசாரணைக்கு பிறகு வேலை நீக்கம் நடந்துள்ள வழக்குகளில் விசாரணை முறையாக நடத்தப்படவில்லை என்ற பிரச்சனைக்கான முதல்நிலை எழுவினா வகுத்துக்கொள்ள வேண்டும் என்றும்,

**1984 AIR 289**

**Shambu Nath Goyal -Vs- Bank of Baroda and others** என்ற வழக்கில் மாண்பமை உயர் நீதிமன்றம் அளித்த தீர்வு முடிவில் நிர்வாகம் எதிர்உரை தாக்கல் செய்யும் போதே, உள்ளக விசாரணை தமக்கு எதிராக சொல்லும்பட்சம் குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் நிரூபிக்க வாய்ப்பு தர வேண்டும் என்ற நிலைபாட்டை நிர்வாகம் எடுத்திருக்க வேண்டும் என்றும் அப்படி எடுக்காத பட்சம் முதல்நிலை எழுவினாவில் தொழிலாளிக்கு சாதகமான முடிவு வந்தால் நீதிமன்றம் தொழிலாளியின் இறுதி வழக்கையே முடிவு செய்யலாம் என்றும்,

**AIR 1964 SC page 708**

**M/s.Kesoram Cotton Mills Limited -Vs- Gangathar and other** என்ற வழக்கில் மாண்பமை உச்ச நீதிமன்றம் தொழிற்துறை விவகாரங்களில் உள்ளீடு விசாரணைகளை கையாளும் போது, நிர்வாகத்தின் சரியான போக்கானது ஆரம்பம் முதல் இறுதி வரை சாட்சிகளை விசாரணை செய்வது தான் என்று கூறியுள்ளது.

**2021 (4) LLJ page 424**

**General Manager State Bank of India and Another -Vs- Central Government Industrial Tribunal - Cum -Labour Court and**

**another** என்ற வழக்கில் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்வு முடிவில் துவக்க நிலையில் விசாரணை முறையற்றது என தூக்கி எறியப்பட்ட விசாரணை சாட்சியத்தை நிர்வாகம் சார்ந்திருக்க முடியாது என்றும் குற்றத்தை நிரூபிக்க, சாட்சியம் அளிக்க வாய்ப்பு கேட்காததால் தண்டனை வழங்கப்பட முடியாது என்றும்,

**W.A.No.361/2020**

**R.Govindarajan -Vs- Indian Overseas Bank** என்ற வழக்கில் 16.02.2023 தேதியில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்வு முடிவில் மீண்டும் பணியும், முழு பின்சம்பளம் தொடர்பான இந்துஸ்தான் டின் ஒர்க்ஸ் மற்றும் தீபாளி குண்டு சர்வேஸ் வழக்குகளில் மாண்பமை உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்புகளில் Gainful Employment இல்லை என்றால் நிர்வாகத்தின் மோசமான நிதி நிலை காரணம் இல்லை என்றால் பின் சம்பளம் மறுக்கக்கூடாது என்று தீர்வு முடிவு காணப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் வேறு பணியில் இல்லை என்றும், எதிர்மனுதாரரின் நிதிநிலை நன்றாக உள்ளதாகவும் எனவே மனுபடி உத்தரவாக வேண்டும் என்று வாதிடப்பட்டது.

9. மேற்கண்டுள்ள தீர்வுகளின் அடிப்படையிலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களையும், வாதுரையும் பரிசீலக்கப்பட்டதன் அடிப்படையில் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து நிர்வாகத்தரப்பில் நிரூபிக்க முன்வரவில்லை என்பதால் மனுதாரர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்ட காரணத்தினால் பழி வாங்கும் நோக்கத்தில் தொழிலாளர் விரோத போக்குடன் செயல்பட்டு, கண்துடைப்புக்காக

உள்விசாரணை நடத்தப்பட்டு, அதன் பிறகு பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளதால் அந்த பணி நீக்கம் சட்டவிரோதம் என்று மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே வழக்கில் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து நிர்வாகத்தரப்பில் ஆஜராகி எந்த விளக்கமும் அளிக்கப்படாத காரணத்தினாலும் மனுதாரர் தரப்பில் அளிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த வகையிலும் எதிர்மனுதாரர் தொழிலாளர் விரோத போக்குடன் நடந்துக்கொண்டு மனுதாரர் சட்டவிரோதமாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் மனுதாரர் தொழிற்சங்கத்தில் நிர்வாக பொருளாளராக இருந்த காரணத்தினாலேயே பழி வாங்கும் நடவடிக்கையாக எதிர்மனுதாரர் செயல்பட்டிருக்க கூடும் என்று கருத தோன்றுவதால் எதிர்மனுதாரர் தரப்பு நடவடிக்கை ஆனது தொ.த.சட்டம் 25(G) பிரிவிற்கு புறம்பானதாக இருப்பதால் மனுதாரர் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

10. எனவே மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு எதிர்மனுதாரர் அளித்த பணி நீக்க உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மனுதாரருக்கு பணி தொடர்ச்சியுடன், முழுபின் சம்பளத்துடன், இதர பண மற்றும் பணி பயன்களுடன் மீண்டும் வேலை அளிக்கப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரருக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

முடிவாக இவ்வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு எதிர்மனுதாரர் அளித்த பணி நீக்க உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மனுதாரருக்கு பணி தொடர்ச்சியுடன், முழு பின் சம்பளத்துடன், இதர பண மற்றும் பணி பயன்களுடன் மீண்டும் வேலை அளிக்கப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரருக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து/ தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2024ம் ஆண்டு ஜுன் மாதம் 14ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2024.06.19 10:43:10 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சிபுரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி :-</u>**

தொ.த.சா.1 V.சதீஷ்குமார் (மனுதாரர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

| | | |
|---|---|---|
| தொ.த.சா.ஆ.1 | 03.10.2007 | தகுதிகாண் பருவத்தினராக நியமிக்கப்பட்ட உத்தரவு நகல். |
| தொ.த.சா.ஆ.2 | 29.08.2009 | மனுதாரருக்கு நிர்வாகம் வழங்கிய பணி நியமன ஆணை நகல்.. |
| தொ.த.சா.ஆ.3 | 04.03.2015 | தொழிற்சங்க அறிமுக கடித நகல். |
| தொ.த.சா.ஆ.4 | 21.05.2015 | மனுதாரர் சங்கத்தை விட்டு விலகவேண்டும் என்று நிர்வாகம் கொடுத்த அறிவிப்பு நகல். |
| தொ.த.சா.ஆ.5 | 22.05.2015 | தொழிற்சங்கம் சமரச அதிகாரி முன்பு அளித்த புகார் கடித நகல். |

| | | |
|---|---|---|
| தொ.த.சா.ஆ.6 | 01.02.2018 | மனுதாரர் தொழிற்சங்கத்தில் இணைந்ததற்கான அறிமுக கடித நகல். |
| தொ.த.சா.ஆ.7 | 26.02.2018 | தொழிலாளர்களின் பொது கோரிக்கைகள் சம்பந்தமாக தொழிற்சங்கம் நிர்வாகத்திற்கு எழுதிய கடித நகல். |
| தொ.த.சா.ஆ.8 | 05.03.2018 | நிர்வாகம் மனுதாரருக்கு அளித்த தற்காலிக பணி நீக்க கடித நகல். |
| தொ.த.சா.ஆ.9 | 09.03.2018 | மனுதாரர் நிர்வாகத்திற்கு நேரிலும் தபாலிலும் அனுப்பிய விளக்க கடித நகல் மற்றும் நிர்வாகம் அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.10 | 26.03.2018 | மனுதாரர் மீது விசாரணை நடத்துவது குறித்து அனுப்பிய அறிவிப்பு நகல். |
| தொ.த.சா.ஆ.11 | 07.02.2018 முதல் 23.08.2019 | விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நகல்கள். |
| தொ.த.சா.ஆ.12 | 27.08.2018 | உள்ளீட்டு விசாரணை மற்றும் முடிவறிக்கை நியாயமற்றது என குறிப்பிட்டு நிர்வாகத்திற்கு மனுதாரர் அனுப்பிய பதில் கடித நகல் மற்றும் நிர்வாகம் அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.13 | 10.01.2018 | விசாரணை முடிவறிக்கை நகல். |
| தொ.த.சா.ஆ.14 | 27.12.2018 | தவறுதலாக தேதியிடட கடித நகல். |
| தொ.த.சா.ஆ.15 | 03.01.2019 | உள்ளீட்டு விசாரணை மற்றும் முடிவறிக்கை நியாயமற்றது என குறிப்பிட்டு நிர்வாகத்திற்கு மனுதாரர் அனுப்பிய பதில் கடித நகல் மற்றும் நிர்வாகம் அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.16 | 07.01.2019 | நிர்வாகத்தின் ஒழுக்க கட்டுப்பாட்டு அதிகாரியின் விவரமான ஆணை நகல். |

| | | |
|---|---|---|
| தொ.த.சா.ஆ.17 | 23.01.2019 | நிர்வாகத்தின் ஒழுக்க கட்டுப்பாட்டு அதிகாரியின் விவரமான ஆணைக்கு மனுதாரர் அளித்த பதில் கடித நகல் மற்றும் நிர்வாகம் அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.18 | 28.01.2019 | நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய 2ம் காரணம் கோரும் அறிவிப்பு நகல். |
| தொ.த.சா.ஆ.19 | 31.01.2019 | 2ம் காரணம் கோரும் அறிவிப்பிற்கு மனுதாரர் அளித்த பதில் கடித நகல் மற்றும் நிர்வாகம் அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.20 | 23.07.2019 | நிர்வாகம் மனுதாரரை பணி நீக்கம் செய்து கொடுத்த உத்தரவு நகல். |
| தொ.த.சா.ஆ.21 | 05.08.2019 | மனுதாரர் பணிக்கொடை தொகையை நிர்வாகத்திற்கு வரைவோலை மூலம் திருப்பி அனுப்பி மீண்டும் வேலை வழங்கவேண்டும் என்று கோரிய கடித நகல் மற்றும் நிர்வாகம் அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை நகல். |
| தொ.த.சா.ஆ.22 | 03.12.2019 | மனுதாரர் நிர்வாகத்திடம் மீண்டும் வேலை கேட்டு தொழிலாளர் துணை ஆணையர் முன்பு தாக்கல் செய்த 2A மனு நகல். |
| தொ.த.சா.ஆ.23 | 06.02.2020 | தொழிற்தாவா மனுவிற்கு நிர்வாகம் அளித்த பதில் கடித நகல். |
| தொ.த.சா.ஆ.24 | 18.02.2020 | நிர்வாகத்தின் பதில் கடிதத்திற்கு மனுதாரர் அளித்த மறுப்பு கடித நகல். |
| தொ.த.சா.ஆ.25 | 02.03.2020 | சமரச முறிவறிக்கை நகல். |
| தொ.த.சா.ஆ.26 | 05.01.2017 | சம்பள விவர ரசீது நகல். |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2024.06.19 10:43:20 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சிபுரம்.